DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : முனியசாமி | Father/Husband Name : ஆறுமுகம் |
| Age : 33 | Village : ஓ.மேட்டுப்பட்டி |
| Taluk : | Calling : முதல் நிலை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Jan 28, 2026 12:48 PM

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

20. நான் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து என்னுடைய பணிப்பதிவேட்டில் என்னுடைய குடும்ப உறுப்பினர்களாக யாரையெல்லாம் சேர்த்துள்ளேன் என்றால் என்னுடைய பெற்றோர்கள் இருவர் மற்றும் என் உடன் பிறந்த நபர்கள் இருவர் என நான்கு பேரை சேர்த்துள்ளேன். என்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளின் விபரத்தை இன்று வரை சேர்க்கவில்லை என்றால் நான் மனைவியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் சேர்க்கவில்லை. நான் பணியில் சேர்ந்து போது என்னுடைய நாமினியாக என்னுடைய தாயார் காளியமாலை பணி பதிவேட்டில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். **(தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட மேற்படி தகவல் மற்றும் அதற்கான கடிதங்கள் ம.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

21. 14.02.2017 ம் தேதி மனுதாரர் என் மீது விருதுநகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் நடைபெற்ற விசாரணையில் நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து நடைபெற்ற விசாரணையின் போது என்னை பேச விடவில்லை, எங்களுக்கு திருமணம் முடித்து வைப்பதற்கு முன்பாகவே மனுதாரருக்கு குழந்தை பிறந்திருந்ததால் அது எனக்கு பிறந்த குழந்தை இல்லை என்றும், என்னை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்ததாகவும் கூறினேன். நான் கூறிய அனைத்தும் என்னுடைய வாக்குமூலத்தில் பதிவு செய்யப்படவில்லை. மனுதாரருக்கு மாதம் ரூபாய் 3000/– கொடுக்கவில்லை என்றால் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்றும், அதன் தொடர்ச்சியாக என்னை தற்காலிக பணிநீக்கம் செய்வார்கள் என்றும் கூறியதால் நான் மாதம் ரூ.3000/– கொடுக்க, வேறு வழியில்லாமல் சம்மதித்தேன். அந்த காலகட்டத்தில் விவாகரத்து வழக்கு நிலுவையில் இருந்து வந்தது. அந்த நடவடிக்கையில் நான் கொடுத்த வாக்குமூலத்தின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். **(தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட மேற்படி தகவல் மற்றும் அதற்கான கடிதங்கள் ம.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

22. ம.சா.ஆ.12 – நான் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து மனு பத்தி 4–ல் 17.12.2016 ம் தேதி குழந்தை பிறந்த பிறகு எனக்கும் மனுதாரருக்கும் இடையே இருந்த பழக்கத்தின் படி இரு வீட்டு பெற்றோரும் திருமணம் செய்ய தீர்மானித்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் நான் அந்த மனுவை முழுமையாக அப்பொழுது படித்துப் பார்க்கவில்லை. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரை மற்றும் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து மனு ஆகியவற்றில் உள்ள விபரங்களை நான்தான் என்னுடைய வழக்கறிஞருக்கு கூறினேன் என்று கூறிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

23. மனுதாரர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் விருதுநகர் மாவட்ட ஆயுதப்படை அலுவலகத்தில் இருந்து விசாரணை

18.09.2017 ஆம் தேதி காலை 10 மணிக்கு விசாரணைக்கு வர அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றால் இல்லை. என் மீது பொய்யாக பல புகார்கள் கொடுத்ததால் எந்த புகார் என்று எனக்கு தெரியவில்லை.

24. நான் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.1 – CC.No.22/2022 – JM–1, Sattur நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட மனுதாரர் மாதவியின் முதல் விசாரணை வாக்குமூலத்தை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், குறுக்கு விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரிந்து விடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எ.சா.ஆ.2 – எங்களுடைய திருமண அழைப்பிதழை நான்தான் இந்த வழக்கில் தாக்கல் செய்தேன் என்றால் அது மனதார வீட்டார் தரப்பில் அச்சடிக்கப்பட்டதாகும். அது வெவ்வேறு தேதிகளில் திருமணம் நடைபெற்றது போல் பத்திரிக்கை மனுதாரர் தரப்பில் அடித்ததால் அதை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த அசல் ஆவணங்களை என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது எங்களால் அச்சடிக்கப்பட்டது என்றாலும், மனுதாரர் தரப்பால் அச்சடிக்கப்பட்டது என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எங்களுடைய திருமணத்தை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை நான் தான் என்னுடைய செலவில் செய்தேன் என்றால் இல்லை.

25. மரபணு பரிசோதனைக்கு அழைத்தபோது மனுதாரரின் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது குழந்தைக்கு புதிய ரத்தம் ஏற்றியதால் குழந்தையின் உடல்நிலை ஒத்துழைக்கவில்லை என்பதால் மருத்துவரின் ஆலோசனையின் படி மனுதாரரால் மரபணு பரிசோதனைக்கு உட்பட முடியவில்லை என்றால் சரியல்ல. குழந்தைக்கு வேறு நபரின் ரத்தத்தை ஏற்றியதால் டி என் ஏ பரிசோதனை செய்தால் வேறு நபரின் டி என் ஏ வரும் என்ற மருத்துவரின் ஆலோசனையின் படி மரபணு பரிசோதனைக்கு மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. மரபணு பரிசோதனை எடுக்க வேண்டும் என்று மனுதாரர் கோரிய நிலையில், அவரை மரபணு பரிசோதனைக்கு ஒத்துழைக்கவில்லை என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல, மரபணு பரிசோதனைக்கு மாதிரி கொடுப்பதற்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றபோது குழந்தை அந்த மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தது. நான் அன்றைய தினம் மதுரை மருத்துவமனைக்கு சென்ற பிறகுதான் குழந்தைக்கு புற்று நோய் பாதிப்பு இருப்பது எனக்கு தெரிய வந்தது. மரபணு பரிசோதனை எடுப்பதற்கும் புற்று நோய் இருப்பதற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றும், வேறு நபரின் ரத்தம் ஏற்றப்பட்டு இருந்தாலும் மரபணு பரிசோதனைக்கு அது தொடர்பு இல்லை என்றும் மருத்துவர் கூறியும் மரபணு பரிசோதனைக்கு மாதிரி எடுக்க மனுதாரர் ஒத்துழைக்கவில்லை.

26. குழந்தை எப்பொழுது இறந்தது என்றால் எனக்கு தேதி தெரியாது, ஆனால் மரபணு பரிசோதனைக்கு மாதிரி கொடுப்பதற்கு நான் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்ற நாளிலிருந்து சுமார் 1 மாதத்திற்குள் இறந்தது. நான் காவலராக பணியாற்றுவதால் மரபணு பரிசோதனைக்கு நான் மதுரைக்கு சென்ற போது காவல் ஆய்வாளரும் என்னுடன் வந்திருந்தார் என்றால் அவர் என்னுடன் வரவில்லை, ஆனால் மதுரை அரசு மருத்துவமனையில் இருந்தார். காவல்துறையைச் சார்ந்த நபர்கள் யாரெல்லாம் அங்கு அப்பொழுது இருந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் முருகேஸ்வரி மற்றும் காவலர் முத்துலட்சுமி ஆகிய இருவரும் இருந்தார்கள். மரபணு பரிசோதனை செய்வதற்காக சென்ற நாளுக்கு முன்பு, ஏழு மாதங்களுக்கு தொடர்ந்து குழந்தை விருதுநகர் அரசு மருத்துவமனை, மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் மதுரை அரசு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் சிகிச்சையில் இருந்து வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது, ஆனால் உடல் நல குறைவு இருந்த விபரம் மட்டும் தெரியும்.

27. குழந்தை உயிரோடு இருந்த ஆறு ஆண்டுகளில் மரபணு பரிசோதனை

செய்ய நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் மனுதாரர் அடிக்கடி பிரச்சனை செய்து வந்தபோது நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது நானும் காவல்துறையில் பணியாற்றுவதால் புகார் கொடுக்க வேண்டாம் என்று என்னிடம் பேசி அனுப்பி வைத்து விடுவார்கள், ஆகையால் நான் என்ன முயற்சியும் எடுக்கவில்லை. குழந்தைக்கு புற்றுநோய் இருந்த காரணத்தினால் அந்த மருத்துவ பரிசோதனைக்காக குழந்தையின் தசை நார்கள் பிரித்தெடுக்கப்பட்டு, மருத்துவமனையில் பாதுகாக்கப்படும் என்றாலும், அவற்றை வைத்து நான் என்னுடைய மரபணுவையும் கொடுத்து மரபணு பரிசோதனை செய்ய நான் தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். அதற்காக நான் மனு தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன்.

28. மனுதாரர் சமூக நல அலுவலகத்தில் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையின் போது நான் தற்போது நீதிமன்றத்தில் கூறும் விபரங்களை கூறினேனா என்றால் கூறியுள்ளேன். நான் விவாகரத்து வழக்கில் கூறியுள்ள விபரங்களில் இருந்து மாறுபட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது மாதம் ரூபாய் 43,000/– சம்பளமாக வருகிறேன். ஆகையால் நான் இருக்கக்கூடிய அதே வசதி வாய்ப்பில் மனுதாரர் என்னுடைய மனைவி என்ற முறையில் வாழ அவருக்கு உரிமை இருக்கிறது என்றால் சரியல்ல. நான் என்னுடைய வேலையை காப்பாற்ற வேண்டும் என்று நினைத்து குழந்தைக்கு செய்ய வேண்டிய உதவிகளை செய்யாமல் இருந்ததால் குழந்தையின் இறப்பிற்கு நான் மறைமுகமாக காரணமாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்கும் அவருடைய குழந்தைக்கும் எவ்விதமான உதவியும் செய்யாமல் தொடர்ந்து அவரை அலைகழிப்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

29. எனக்கும் மனுதாரருக்கும் நடைப்பெற்ற திருமணம் தற்போது வரை ரத்து செய்யப்படவில்லை என்பதால் நான் மனுதாரருக்கும் குழந்தை உயிருடன் இருந்த காலம் வரை குழந்தைக்கும் வாழ்க்கை பொருளுதவியும், மனுதாரருக்கு இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடைய மனைவி இல்லை என்பதாலும், குழந்தை என்னுடைய குழந்தை இல்லை என்பதாலும் நான் அவர்களுக்கு வாழ்க்கை பொருளுதவி கொடுக்க கடமைப்பட்டவரல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur